WEB COPY



**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**

DATED : 20.11.2025

CORAM

**THE HONOURABLE MRS.JUSTICE K.GOVINDARAJAN THILAKAVADI**

**S.A. No.130 of 2019 and C.M.P. No.2617 of 2019**

V. Chinnaponnan …Appellant

Vs.

1. Hamsalakshmi
2. V. Ponnusamy
3. V. Ayyasamy
4. Ponnammal (died)
5. Rajendran
6. P.Rameshkumar
7. Sakunthala
8. Minor Darshan …Respondents

R4 died. RR5 to 8 are brought on record as LRs of the deceased R4 vide Court order dated 13.11.2025 made in CMP Nos. 19463 & 19470 of 2025.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**Prayer**: This Second Appeal is filed under Section 100 of the code of Civil Procedure, against the judgment and decree dated 27.11.2017 made in A.S. No.18 of 2015 on the file of the I Additional District Court, Coimbatore, reversing the judgment and decree dated 20.06.2014 made in O.S. No.143 of 2011 on the file of the II Additional Sub Court, Coimbatore.

For Appellant : Mr. C.R. Prasanan

For Respondents : Mr. L. Mouli for R1
Mr. R. Vivekanandan for R5 to R7
R2 & R3 - No appearance
R8 - Minor represented by R7

## JUDGMENT

This Second Appeal is filed against the judgment and decree dated 27.11.2017 made in A.S. No.18 of 2015 on the file of the I Additional District Court, Coimbatore, reversing the judgment and decree dated 20.06.2014 made in O.S. No.143 of 2011 on the file of the II Additional Sub Court, Coimbatore.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



2. With the consent of both the parties the matter was referred to the District Mediation and Conciliation Centre, Coimbatore, for arriving at an amicable settlement between the parties. Accordingly settlement was arrived at between the parties and a Mediation Report of the District Mediation and Conciliation Centre, Coimbatore, along with a Memorandum of Compromise dated 21.04.2025 entered into between the parties, duly signed by both the appellant and the respondents and their counsels and with sketches, is filed and the same is recorded. The learned counsel for the respondents 5 to 8 has filed a certificate issued under Order 32 Rule 7(1A) of the Code of Civil Procedure stating that, taking into consideration of the interest of Minor Darshan, the above mentioned compromise had been entered into between the parties and the same is also recorded. The said Memorandum of Compromise is scanned hereunder:



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



# தமிழ்நாடு சமரச மையம், கோயமுத்தூர் மாவட்டம்

சமரச வழக்கு எண்: 306 /2025 தேதி: 21.04.2025

நீதிமன்ற வழக்கு விவரம் : S.A.No: 130 of 2019

நீதிமன்ற விவரம் : மாண்புமிகு உயர்நீதிமன்றம், சென்னை

சமரச மையத்திற்கு அனுப்பிய தேதி : 16.04.2025

## சமரச ஒப்பந்தம்

2025-ம் வருடம் ஏப்ரல் மாதம் 21-ம் தேதி வழக்கில் சம்பந்தப்பட்ட இரு தரப்புக்கும் இடையில் செய்து கொண்ட சமரச ஒப்பந்தமானது என்னவென்றால்,

மேற்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த இரண்டாவது மேல்முறையீடு எண்: 130 of 2019 வழக்கின் மேல்முறையீட்டாளரும், கோயமுத்தூர் மாவட்டம், தீத்திபாளையம் அஞ்சல், தீத்திபாளையம் கிழக்கு தோட்டத்தில் வசித்து வரும் லேட் வேட்டைய கவுடர் மகன், திரு V. சின்ன பொன்னான் (வயது 75 வருடம்)

மேற்படி சின்னபொன்னான் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் திரு B. முரளீதரன் B.A.,B.L., ( M.S.No:503/1985)

ஆகிய மேல்முறையீட்டுதாரருக்கும்.

(1) மேற்படி இரண்டாவது மேல்முறையீட்டின் முதல் எதிர்மேல்முறையீட்டாளருமான கோயமுத்தூர் மாவட்டம், பாப்பநாயக்கன்புதூர், R.G. வீதி, கதவு எண்: 66-ல் குடியிருக்கும் மோகன்ராஜ் மனைவியும், லேட் வேட்டைய கவுண்டரின் மகளுமான திருமதி அம்சலஷ்மி ( வயது 72 வருடங்கள்)

மேற்படி அம்சலஷ்மி சார்பில் ஆஜரான வழக்குரைஞர் திரு S. சுரேஷ் B.A.,B.L., ( M.S.No: 655/1988)

(2) மேற்படி இரண்டாவது மேல்முறையீட்டின் இரண்டம் எதிர்மேல்முறையீட்டாளரும், கோயமுத்தூர் மாவட்டம், தீத்திபாளையம் அஞ்சல், தீத்திபாளையம் கிழக்கு தோட்டத்தில் வசித்து வரும் லேட் வேட்டைய கவுடர் மகன், திரு V. பொன்னுசாமி (வயது 78 வருடம்)

https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



(3) கோயமுத்தூர் மாவட்டம், தீத்திபாளையம் அஞ்சல், தீத்திபாளையம் கிழக்கு தோட்டத்தில் வசித்து வரும் லேட் வேட்டைய கவுடர் மகன், திரு V. அய்யாசாமி (வயது 69 வருடம்)

மேற்படி பொன்னுசாமி, அய்யாசாமி சார்பில் ஆஜரான வழக்குரைஞர்கள் திரு K. ஆனந்த பாபு B.A.,B.L., (M.S.No:2001/2008) மற்றும் திருமதி ஷீஷ்மா B.A.,B.L., ( M.S.No:2419/2010 )

(4) மேற்படி மேல்முறையீட்டில் 4-வது எதிர்மேல்முறையீட்டாளரான திருமதி பொன்னம்மாள் அவர்கள் கடந்த 04.05.2024 தேதியில் காலமாகி விட்டார். அவருடைய மகனானவரும், கோயமுத்தூர் மாவட்டம், தீத்திபாளையம் அஞ்சல், தீத்திபாளையம் கிழக்கு தோட்டத்தில் வசித்து வரும் லேட் பழனிசாமியின் மகன், திரு P. ராஜேந்திரன் (வயது 52 வருடம்)

(5) மேற்படி மேல்முறையீட்டில் 4-வது எதிர்மேல்முறையீட்டாளரான திருமதி பொன்னம்மாள் அவர்கள் கடந்த 04.05.2024 தேதியில் காலமாகி விட்டார். அவருடைய மகனானவரும், கோயமுத்தூர் மாவட்டம், தீத்திபாளையம் அஞ்சல், தீத்திபாளையம் கிழக்கு தோட்டத்தில் வசித்து வரும் லேட் பழனிசாமியின் மகன், திரு P. ரமேஷ்குமார் (வயது 48 வருடம்)

(6) மேற்படி மேல்முறையீட்டில் 4-வது எதிர்மேல்முறையீட்டாளரான திருமதி பொன்னம்மாள் (இறப்பு) அவருடைய மகன் கடந்த 06.10.2020 தேதியில் இறந்து போன மகன் சிதம்பரத்தின் மனைவியான கோயமுத்தூர் மாவட்டம், தீத்திபாளையம் அஞ்சல், தீத்திபாளையம் கிழக்கு தோட்டத்தில் வசித்து வரும் திருமதி சகுந்தலா (வயது 38 வருடங்கள்)

(7) மேற்படி அதே விலாசத்தில் வசித்து வரும் திருமதி சகுந்தலா அவர்களின் மைனர் மகன் தர்ஷன் (வயது 14 வருடங்கள்)

மேற்படி பொன்னுசாமி, அய்யாசாமி சார்பில் ஆஜரான வழக்குரைஞர் திரு R. மோகன்ராஜ் B.A.,L.LB., ( M.S.No:8368/2022 )

ஆகிய 7 பேர்களுக்கும்

மேற்படி இருதரப்பினர்களுக்கும் இடையில் சமரசமாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற வகையில்,

WEB COPY





2. மேற்படி இரண்டவது மேல்முறையீட்டு வழக்கானது மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதியரசர் அவர்களின் 07.04.2025 தேதியிட்ட உத்தரவின் பேரில் மேற்படி சமரச மையத்திற்கு அனுப்பபட்டது

3. மேற்படி இரு தரப்பிலும் ஆஜரானவர்கள் திரு **M.** பாலசுப்ரமணியம் **B.Sc.,B.L.,** அவர்கள் சமரசராக பணியாற்ற சம்மதம் தெரிவித்தார்கள்.

4. மேற்படி வழக்கானது இருதரப்பினர்களும், அவரவர்கள் வழக்குரைஞர்கள் முன்னிலையில் கடந்த 16.04.2025 மற்றும் 17.04.2025 மற்றும் 21.04.2025 தேதிகளில் பலமுறை சமரச வழிமுறைகளின்படி பேச்சுவார்த்தை நடைபெற்றது. மேற்படி இரு தரப்பினர்களும் மேற்படி சமரசர் உதவியுடன் தன்னிச்சையாக அவர்களுக்குள் சமாதானம் ஏற்படும் வகையில் அவர்களுக்குள் வழக்கு சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சினைகள் மற்றும் சொத்து பங்கீடு குறித்து இறுதி முடிவுகள் எடுக்கும் வகையில் பேசி முடிக்கப்பட்டது. மேற்படி இரு தரப்பினர்களும் ஒப்புக் கொண்ட வகையில் தாவா சொத்து சம்பந்தமாக இறுதி முடிவு எடுக்கப்பட்டு கீழ்கண்ட ஒப்பந்த ஷரத்துக்கள்படி நடந்து கொண்டு அவரவர் சொத்துக்களை சுவாதீனம் அடைந்து கொண்டார்கள்.

மேற்படி இரண்டாவது மேல்முறையீட்டாளர்/வாதியான திருமதி அம்சலஷ்மி அவர்கள் தனது தந்தையான லேட் வேட்டைய கவுண்டருக்கு பாத்தியபட்ட கூட்டுக்குடும்ப சொத்தானது கோயமுத்தூர் மாவட்டம், தீத்திபாளையம், க.ச.எண்: 295/1,2, 198/3, 198/4-A, 200/1-B, 202/1, 406, 1-A,B, 407/1 காலைகளில் உள்ளது என்றும், ஷை சொத்துக்களில் தனக்குரிய பங்கை பிரித்து தனி சுவாதீனம் கொடுக்கக் கோரி கோயமுத்தூர் 2 வது சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு O.S.No: 143 of 2011 அவருடைய சகோதரர்கள் திரு சின்ன பொன்னான், பொன்னுசாமி, அய்யாசாமி மற்றும் சகோதரி பொன்னம்மாள் (அசல் வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகள்) ஆகியோர் மீது வழக்கு தொடர்ந்தார். ஷை வழக்கு கீழமை நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது. ஷை தீர்ப்பை எதிர்த்து ஷை அம்சலஷ்மி அவர்கள் கோயமுத்தூர் 1-வது கூடுதல் மாவட்ட நீதிபதி நீதிமன்றத்தில் மேல்முறையீடு A.S.No: 15 of 2015 தாக்கல் செய்து அது வாதிக்கு ஆதரவாக அனுமதிக்கப்பட்டது. அந்த தீர்ப்பை எதிர்த்து ஷை சின்னபொன்னான் அவர்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் 2வது மேல்முறையீடு செய்து அது S.A.No: 130 of 2019 ஆக நிலுவையில் இருந்த போது மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் கடந்த 07.04.2025

WEB COPY





தேதியிட்ட உத்தரவுபடி வைஷ வழக்கு சம்பந்தமாக இரு தரப்பினர்களும் சமரசம் பேசும் வகையில் கோயமுத்தூர் சமரச மையத்திற்கு அனுப்பப்பட்டது. வைஷ சமரச பேச்சுவார்த்தையின் முடிவில் இந்த சமரசம் முடிவுக்கு வந்து வைஷ சமரச ஒப்பந்தம் எழுதப்பட்டது.

மேற்படி இரண்டாவது மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருக்கும் போது, 4-வது எதிர்மேல்முறையீட்டாளரான திருமதி பொன்னம்மாள் அவர்கள் கடந்த 04.05.2024 தேதியில் காலமாகி விட்டதாக இருதரப்பிலும் கூறப்பட்டது வைஷ பொன்னம்மாளின் கணவரான திரு பழனிசாமி அவர்களும் பொன்னம்மாளுக்கு முன்பே காலமாகி விட்டார் என்பது பொன்னம்மாளின் வாரிசு சான்றிதழ் மூலம் தெரிய வருகிறது. வைஷ பொன்னம்மாளுக்கு மூன்று மகன்கள் (1) திரு ராஜேந்திரன் (2) திரு ரமேஷ்குமார் மற்றும் (3) திரு சிதம்பரம். வைஷ சிதம்பரம் அவர்கள் கடந்த 06.10.2020 தேதியில் காலமாகி விட்டார் அவருடைய மனைவி திருமதி சகுந்தலா மற்றும் மைனர் மகன் தர்ஷன். வைஷ பொன்னம்மாளின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் மற்றும் வைஷ சிதம்பரத்தின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ்கள் பரிசீலக்கப்பட்டு அவைகள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இருதரப்பினர்களுக்கும் இடையில் ஏற்பட்ட சமரச ஒப்பந்தமானது எழுத்து மூலமாக இரு தரப்பினர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டது. வைஷ எழுத்து மூலமான ஒப்பந்தம் மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள 5 வரைபடங்கள், இந்த சமரச ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வைஷ ஒப்பந்தமானது வைஷ அசல் வழக்கான O.S.No: 143 of 2011 வழக்கில் கண்டுள்ள வாதி, பிரதிவாதிகள் விவரப்படியும் அந்த வழக்கின் 4-வது பிரதிவாதியான திருமதி பொன்னம்மாள் இறப்பு குறிப்பிடப்பட்டு அவரின் வாரிசுகளாக 5 முதல் 8 பிரதிவாதிகளான திரு ராஜேந்திரன், ரமேஷ்குமார், சகுந்தலா மற்றும் மைனர் தர்ஷன் சேர்க்கப்பட்டுள்ளது. மைனர் தர்ஷன் நன்மைக்காக இந்த சமரச முடிவு செய்யப்பட்டுள்ளது என்று சகுந்தலா சார்பில் சான்றளிக்கப்பட்டு அது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

5. மேற்படி இரு தரப்பினர்களும் முழு மனதுடன் சமரசம் செய்து கொண்ட வகையில் தீர்மானமாக உறுதி கூறி இந்த சமரச ஒப்பந்தத்தை சமரசர் முன்னிலையில் இறுதி முடிவு செய்து கொண்டார்கள். இந்த சமரச ஒப்பந்தத்துடன் வைஷ பொன்னம்மாளின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ், வைஷ சிதம்பரத்தின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ்களின் புகைப்பட நகல்கள், இரு தரப்பினர்களின் ஆதார் அட்டையின் புகைப்பட நகலகள் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களின் புகைப்படங்கள் ஒட்டப்பட்டு அவைகள் அவரவர்கள்

WEB COPY





வழக்குரைஞர்களால் உறுதியளிக்கப்பட்டது. இந்த சமரச ஒப்பந்தமனது இரு தரப்பினர்களுக்கும் முழுவதுமாக படித்துக் காண்பிக்கப்பட்டு அவர்களின் எழுத்து மூலமான சமரச ஒப்பந்த ஷரத்துக்கள் மற்றும் வரைபடங்கள் அவர்கள் ஏற்றுக் கொண்டதாக உறுதி செய்யப்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த சமரச ஒப்பந்தம் மற்றும் அவர்கள் தாக்கல் செய்த சமரச ஒப்பந்தம், வரைபடங்கள் இருதரப்பினர்களாலும், அவரவர் வழக்குரைஞர்களால் கையெழுத்து இடப்பட்டுள்ளது.

6. மேற்படி இரு தரப்பினர்களும் ஒப்புக் கொண்ட வகையில் கீழ்கண்ட ஷரத்துகளின்படி மேற்படி வழக்கு சமரசமாகியது.

<u>சமரச ஒப்பந்த ஷரத்துக்கள்</u>

A. இந்த சமரச ஒப்பந்தத்துடன் இணைக்கப்பட்டுள்ள இரு தரப்பினர்கள் மற்றும் அவர்களது வழக்குரைஞர்கள் கையெழுத்திட்ட 20 பக்கங்கள் கொண்ட சமரச ஒப்பந்தம் மற்றும் 5 வரைபடங்கள் ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி அவரவர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை அவரவர்கள் தனிப்பட்ட விதத்தில் சுவாதீனம் அடைந்து அனுபவித்துக் கொண்டுள்ளார்கள் என்று இரு தரப்பினர்களும் ஒப்புக் கொள்கிறார்கள். மேற்படி பிரிபட்ட சொத்துக்கள் சம்பந்தமாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட பிறகு பட்டாக்களில் அவரவர் பெயர்களில் தனியாக மாற்றிக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

B. மேற்கண்ட இருதரப்பினர்களும், அவர்களது வழக்குரைஞர்களும் கையெழுத்திட்டு சமரசரிடம் தாக்கல் செய்த சமரச ஒப்பந்தம் மற்றும் அதனுடன் இணைத்துள்ள 5 வரைபடங்களில் குறிப்பிட்டபடி,

(i) "A" அட்டவணை சொத்து மேற்படி அசல் வழக்கு வாதி திருமதி அம்சலஷ்மி அவர்கள் தனியாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது.

(ii) "B" அட்டவணை சொத்து மேற்படி அசல் வழக்கு முதல் பிரதிவாதி திரு பொன்னுசாமி அவர்கள் தனியாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது.

(iii) "C" அட்டவணை சொத்து மேற்படி அசல் வழக்கு இரண்டாம் பிரதிவாதி திரு சின்ன பொன்னான் அவர்கள் தனியாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது.

(iv) "D" அட்டவணை சொத்து மேற்படி அசல் வழக்கு 3-ம் பிரதிவாதி திரு அய்யாசாமி அவர்கள் தனியாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY





(v) "E" அட்டவணை சொத்து மேற்படி அசல் வழக்கு 4-ம்பிரதிவாதி திருமதி பொன்னம்மாள் (இறப்பு) அவர்களின் வாரிசுகளான திரு ராஜேந்திரன், திரு ரமேஷ்குமார் ஆகியோர்களுக்கு தலா 1/3 பங்கும், திருமதி சகுந்தலா, மைனர் தர்ஷன் ஆகியோர்களுக்கு 1/3 பங்கும் அனுபவித்துக் கொள்ள வேண்டியது.

(vi) "F" அட்டவணை சொத்தில் Item-1 சொத்து விவரத்தில் பொது ஷராவில் குறிப்பிட்டுள்ள கிணற்றை 1 முதல் 3 பிரதிவாதிகளான பொன்னுசாமி, சின்னபொன்னான், அய்யாசாமி ஆகியோர்கள் பொதுவாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது. "F" அட்டவணை சொத்தில் Item-2 சொத்தில் குறிப்பிட்டுள்ள பொதுவழி தடத்தை வாதி அம்சலஷ்மி மற்றும் பொன்னுசாமி, சின்ன பொன்னான், அய்யாசாமி, ராஜேந்திரன், ரமேஷ்குமார், சகுந்தலா மற்றும் தர்ஷன் ஆகியோர்கள் பொதுவாக அனுபவித்துக் கொள்ள வேண்டியது என்றும் முடிவு செய்யப்பட்டது.

C. மேற்படி இரு தரப்பினர்களும் செய்து கொண்ட கூட்டு சமரச ஒப்பந்தத்தில் கண்டுள்ள அனைத்து ஷரத்துகளின் படி இருதரப்பினர்களும் நடந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

D. மேற்படி தாவா சொத்துக்கள் குறித்து இந்த சமரச ஒப்பந்தப்படி ஹை நீதிமன்றத்தில் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க வாதி, பிரதிவாதிகளுக்குள் எந்தவித ஆட்சேபணையும் இல்லை என்றும் அது தொடர்பான நீதிமன்றம் சாரா முத்திரை வில்லை கட்டணங்கள் மற்றும் செலவு தொகைகள், வாதி மற்றும் பிரதிவாதிகள் ( இரு தரப்பினர்கள்) செலுத்த இதன் மூலம் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

E. இந்த சமரச ஒப்பந்தம், மற்றும் இருதரப்பினர்களும் தாக்கல் செய்துள்ள கூட்டு சமரச ஒப்பந்தம் மற்றும் வரைபடங்கள் மாண்புமிகு நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்படும் இறுதிநிலை தீர்ப்பாணையின் ஒரு அங்கமாக கருத வேண்டும் என்று இரு தரப்பினர்களால் முடிவு செய்யப்பட்டது.

7. இரு தரப்பினரும் ஒப்புக் கொண்டு சமரச ஒப்பந்தம் எழுதிக் கொண்டு, அவரவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை தனியாக சுவாதீனம் எடுத்துக் கொண்டதால், இந்த சமரச ஒப்பந்தத்தில் கண்டுள்ள சொத்துக்கள் தவிர வேறு எந்தவித கோரிக்கையும் இனி இல்லை என்றும், இரு தரப்பினர்களுக்கும் இடையே இருந்த பிரச்சினைகளும், வேறுபாடுகளும் மேற்படி சமரச நடைமுறை மூலம் முடிவுக்கு வந்தது என்று இரு தரப்பார்களும் இதன் மூலம் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

WEB COPY



Date: 21.04.2025

**இணைப்பு:**

1. இருதரப்பினர்களின் ஆதார் அட்டையின் புகைப்பட நகல்கள் (8 )

2. இருதரப்பினர்கள் தாக்கல் செய்த எழுத்துமூலமான ஒப்பந்தம் (20 பக்கங்கள் கொண்டது) மற்றும் 5 வரைபடங்கள்.

3. பொன்னம்மாளின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ், ஷை சிதம்பரத்தின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ்களின் புகைப்பட நகல்கள் (4)



(சின்ன பொன்னான்) (D-2)

மேல்முறையீட்டாளர்

மேல்முறையீட்டாளர் வழக்குரைஞர்

(S.A.No: 130 of 2019)



( அம்சலஷ்மி) (Plaintiff)

1-வது எதிர்மேல்முறையீட்டாளர்/ 1-வது எதிர்மேல்முறையீட்டாளர் வழக்குரைஞர்





( பொன்னுசாமி) (D-1) சாமி) (D-3)

2, 3 எதிர்மேல்முறையீட்டாளர்கள் 2, 3-வது எதிர்மேல்முறையீட்டாளர்கள் வழக்குரைஞர்

WEB COPY





5.( ராஜேந்திரன்)



6. (ரமேஷ்குமார்)





7. (சகுந்தலா) 8.(மைனர் தர்ஷன்)

(தனக்காகவும் மைனர் தர்ஷனுக்காகவும்)
5 முதல் 8 பிரதிவாதிகள்
(இறந்து போன அசல் வழக்கு 4-வது
பிரதிவாதி (D-4) பொன்னம்மாளின் வாரிசுகள்)

5 முதல் 8 பிரதிவாதிகள்
வழக்குரைஞர்

3. The Second Appeal in S.A. No.130 of 2019 is disposed of in accordance with the memorandum of compromise arrived at between the parties in the District Mediation and Conciliation Centre, Coimbatore. The memorandum of compromise along with the sketches shall form part of the decree in S.A.No.130 of 2019. No costs. Consequently, connected Civil Miscellaneous Petition is closed.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



4.The Court fee shall be refunded to the appellant as per rules.

20.11.2025

bga

Internet:Yes/No
Index:Yes/No
Speaking/Non-speaking order
To

1. The I Additional District Court, Coimbatore.

2. The II Additional Sub Court, Coimbatore.

3. The Section Officer, VR Section, High Court, Madras.



https://www.mhc.tn.gov.in/judis

WEB COPY



**K.GOVINDARAJAN THILAKAVADI, J.**

bga

**S.A. No.130 of 2019 and**
**C.M.P. No.2617 of 2019**

**20.11.2025**



https://www.mhc.tn.gov.in/judis